[1978 மார்ச் 11

திரு. தி. சு. நல்லதம்பி: இப்பெருநகர் திட்டம் காரணமாக சென்னை நகரில் வசிக்கிற நடுத்தர மக்கள் அல்லது பிற்பட்ட மக்கள் சிறிய வீடுகள் கட்டிக்கொள்ள பல சங்கடங்களும் தொல்லைகளும் ஏற்படுவதாக பொதுவாகப் பேசப்படுகிறதே, அதைப் போக்குவதற்கு அமைச்சரவை ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி, சின்னசேலம் குடிநீர்த் திட்டம்

*520 வினா—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு மணிமுக்தா நதியில் இருந்து குடிநீர் கொண்டுவருவதற்கான திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இத்திட்டத்தில் சின்னசேலத்தையும் இணைத்து செயல்படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : கள்ளக்குறிச்சி பேரூராட்சி மணிமுக்தா நதியிலிருந்தும், சின்னசேலத்திற்கு கோமுகி நதியிலிருந்தும் குடிநீர் வசதி பெற குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஆய்வு செய்யப்பட்டதா? அப்படி ஆய்வு செய்யப்பட்டது என்னவாயிற்று ? சின்னசேலம், கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் எவ்வளவுதான் புயல், வெள்ளம் ஏற்பட்டாலும் இன்னும் ஆறு மாதத்திற்குள்ளாக அங்கே குடிநீர் பஞ்சம் நிச்சயமாக வரும் என்ற நிலைதான் இருக்கிறது. எனவே எவ்வளவு விரைவில் அத்திட்டம் முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சின்னசேலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கென விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பரிசிலிக்கப்பட்டு, இறுதியில் கோமுகி ஆற்றில் கீழ் அணைக்கருகில் தலைமைப் பீடம் அமைத்து

1978 மார்ச் 11]

நகருக்கு வேண்டிய குடிநீரைப் பெறலாம் என கருதப்பட்டது. எனினும், இவ்விடத்திலிருந்து கிடைக்கப்பெறும் நீரின் அளவு, மற்றும் நீரின் தன்மை, இவற்றை அறியும்பொருட்டு முதல் கட்டமாக நீர் ஆதாரத்தை ஏற்படுத்தி சோதனை செய்வதற்கென ரூ. 1.20 லட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு மணிமுக்தா நதியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் ஆய்வுத் திட்டத்தில் சின்னசேலம் பேரூராட்சி இணைக்கப்படவில்லை. இருப்பினும், இவ்விரு ஆய்வுத் திட்டங்களின் முடிவுகளை கருத்திற்கொண்டு, தேவையெனில் ஒருங்கிணைந்த திட்டமொன்று அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகள் பரிசிலிக்கப்படும்.

சிதம்பரம் நகராட்சியில் நீர்த்தேக்கத் தொட்டி

*521 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகராட்சி, குடிதண்ணீர் பற்றுக்குறையை நீக்க மற்றும் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு மானியத் தொகை அளிக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : சிதம்பரம் நகராட்சி குடிநீர் பற்றுக்குறை காரணமாக 20 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதாக தகவல் தெரிய வருகிறது. அது அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சிதம்பரம் நகராட்சி குடிநீர் மேம்பாடுக்கான திட்டம் ஒன்றை கொள்ளிடத்தை ஆதாரமாகக் கொண்டு ரூ.64